[8th November 1966

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The Oil and Natural Gas Commission has proposed to undertake drilling operation for exploration of Oil and Natural Gas in Karaikal, Shiyali, Nagapattinam, Thiruthuraipoondi and Pamban areas.

(b) These places are selected after studying carefully the available geological and geophysical data.

திரு. ஆ. கு. சுப்பையா: திருத்துறைப்பூண்டி எண்ணெய் வள ஆராய்ச்சி எந்த நிலையில் உள்ளது என்று அமைச்சர் அறிவிப்பாரா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: திருத்துறைப்பூண்டியில் ஒரு கிணறு தோண்டப்பட்டது, 1,141 மீட்டர் அளவிற்கு சென்றிருக்கிறது, அதிலிருந்து பூமிக்கு அடியில் சர்வே டேடா என்றுதான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எண்ணெய் இருப்பதாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.

திரு. மா. கண்டாயுதபாணி: தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பட்டுக்கோட்டைப் பகுதியில் எண்ணெய் ஆராய்ச்சி நடத்துவதற்கு கிணறு தோண்டப்பட்டது. தற்போது வேறு ஒரு இடத்தில், கிராமத்தில் தோண்டப்படுகிறது. எண்ணெய் கிடைக்கும் என்று கண்டுபிடித்திருக்கிறார்களா அல்லது இல்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இரண்டு முடிவுக்கும் வரவில்லை, இருக்கும் என்றோ அல்லது இல்லை என்றோ இரண்டு முடிவுக்கும் வரவில்லை. 839 மீட்டர் ஆழம் சென்றிருக்கிறது. சில டேடாக்கள் கிடைத்திருக்கின்றன. அதைக் கொண்டு ஒரு முடிவும் செய்ய முடியவில்லை.

Bus fare (refund)

* 510 Q.—SRI V. SANKARAN: Will the Minister for Industries be pleased to state—

(a) Whether the Government are evolving any new arrangement for the quick refund of money on the cancellation of Reserved tickets by the Madras State Transport Department; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) A proposal for making refunds of fares at the depots in the mofussil, which are under the control of Gazetted officers, is under consideration.

திரு. எம். எஸ். மணி: சார், ரெயில்வே டிக்கெட் ரிசர்வேஷன் செய்து கான்சல் செய்தால், உடனே பத்து நிமிஷத்திலே சிறிது சில்லரையைக் கழித்துக்கொண்டு பாக்கியைத் திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள். இங்கே ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட்டில் ஆறு மாதம் ஆனாலும் ரீபண்ட் செய்யாமல் இருக்கிறார்கள். அப்படி கான்சல்

8th November 1966]

செய்யும்போது ஒரு எமௌண்டைப் பிடித்துக் கொண்டு, பாக்கியைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறோம். எங்கெல்லாம் கெஜடட் ஆபீசர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் உடனடியாக பணத்தைத் திருப்பி கொடுக்கலாம் என்கிற யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

மதுகாச மருந்து

* 524 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுகாச மருந்தை தடை செய்ய வேண்டுமென்று தென் கடலூர் மாவட்ட அபிவிருத்தி மன்றம் 2—11—1965-ல் நடைபெற்ற கூட்டம் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) சபை முன் 9-30 a.m.
விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. தங்கவேலு : தலைவரவர்களே, மதுவிலக்கை ரத்து செய்த அரசாங்கம் மதுகாசக் கடைகளைத் தாராளமாக வைத்துக் கொள்ள அனுமதித்து இருப்பது, மது குடிப்பதை மறைமுகமாக அனுமதிப்பதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த மதுகாசம் போன்ற பொருள்களைத் தடுக்கவேண்டுமென்று சொன்னால் இந்தியன் டிரக்ஸ் ஆக்ட்டைத் திருத்தவேண்டுமென்று அறிகிறேன். ஆகவே, அது சம்பந்தமாக நம்முடைய சர்க்கார் இந்திய சர்க்காருக்கு எழுதி, டிரக்ஸ் ஆக்டைத் திருத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மத்திய அரசாங்கம் Indian Drugs and Cosmetics Amendment Act கொண்டுவரப் போகிறார்கள். அதற்கு நம்முடைய மாகாணத்தில் விற்கக்கூடிய மருந்துகள், தேவைகள் இவற்றிலே இந்திய மருத்துவ முறைப் பிரகாரம் எவற்றையெல்லாம் அதிலே சேர்க்க வேண்டும், சேர்க்கக் கூடாது என்ற சிபாரிசுகள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டிருக்கின்றன.

திரு. கோ. சி. மணி : இந்த மதுகாசம் குடித்து ரசீது வைத்து இருந்தும், மதுகாசம் குடித்தவர் என்று சொல்லப்பட்டும், டாக்டர்கள் மதுகாசத்திலே ஆல்கஹால் அதிகமாக இருக்கிறது

* 728–729-ம் பக்கத்தில் 9-வது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.